# கொழும்புப் பல்கலைக்கழகம் – இலங்கை

## கலைப்பீடம்

## கலைமாணி இரண்டாம் வருடப் பரீட்சை – பருவம் II – 2016/2017

## PSC 2235 – பிராந்திய மற்றும் பூகோள அரசியலில் இலங்கை

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

ஒவ்வொரு விடையும் அதிகபட்சம் **இருபது (20)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

1. 1948 – 1956 வரையான காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மேற்கு அணி சார்ந்ததாகவிருந்ததா அல்லது இல்லையா என்பதை நுணுக்கமாக மதிப்பிடுக.

2. பனிப்போர் காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய இலங்கையின் பொருளாதார உறவுகளின் முக்கிய மூலக்கூறுகளை கலந்துரையாடுக.

3. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் ஓர் பிரதான காரணியான அணிசேரா இயக்கம் குறித்து நுணுக்கமான கட்டுரை ஒன்று வரைக.

4. ஒன்றில்

   (i) “ஒரே கட்சியைச் சார்ந்த தலைவர்களாக இருந்தமையால் ஜே.ஆர். ஜெயவர்தனா மற்றும் ரணசிங்க பிரேமதாஸ ஆகிய இரு தலைவர்களிற்கும் இடையிலான வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு தொடர்ச்சித்தன்மை நிலவியபோதும், இரு தலைவர்களும் அவர்களது பாணி மற்றும் அணுகுமுறை என்பவற்றில் மிகவும் தெளிவாக வேறுபட்டிருந்தனர்.” இக்கூற்றினை உதாரணங்களுடன் நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

   அல்லது

   (ii) “இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, சுதந்திர காலம் முதல் கட்சி அரசியலை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்பட்டுள்ளது.” கலந்துரையாடுக.

(P.T.O.)

5. "1956ஆம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு நிலைமாற்ற காலமாகும்." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்குக.

6. இந்து சமுத்திரத்தின் பூகோள அரசியலை ஆதாரமாகக் கொண்டு, இலங்கையின் இன மோதலில் இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றின் ஈடுபாட்டினை ஆராய்க.

7. பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டு (02)** பற்றி குறிப்புகள் எழுதுக:

   i. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் காரணிகள்

   ii. பொதுநலவாய அமைப்பும் இலங்கையும்

   iii. ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் வகிபாகம்

   iv. இலங்கையும் சார்க்கும்

********************